

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | மே 31, 2018 | புரட்சி 17 | முழக்கம் 20 | விலை: ரூ.3.00


## புலனாய்வில் அம்பலமாகும் அதிர்ச்சித் தகவல்

# மீண்டும் பா.ஜ.க. ஆட்சி அமைக்க பார்ப்பன–பனியா–ஊடகங்கள் விலைபோகத் தயார்

பார்ப்பன - பனியாக்களின் கட்டுப்பாட்டில் இந்தியாவின் ஊடகங்கள் இருக்கும் நிலையில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்துத்துவா’ கொள்கைகளைப் பரப்புவதற்காக அவை விலை போகத் தயாராக இருக்கின்றன. ‘கோப்ரா போஸ்ட்’ என்ற ‘புலனாய்வு இணையதளம்’ இந்த அதிர்ச்சித் தகவல்களை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தி யிருக்கிறது. ‘‘கோப்ரா போஸ்ட்’ புலனாய்வு இணையதளம் 2003ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பல ஊழல்களை வெளிப்படுத்தி வந்த ‘டெகல்கா’ ஆங்கில பத்திரிகையை நிறுவியவர்களில் ஒருவரான அனிருதாபகல் என்ற துணிச்சலான பெண் பத்திரிகையாளர் இந்த புலனாய்வு இணையத்தை உருவாக்கி பல மேல்மட்ட ஊழல்களை அம்பலப்படுத்தி வருகிறார்.

2019 தேர்தலில் ‘பகவான் கிருஷ்ணன்’, ‘பகவத் கீதை’யை முன்னிறுத்தி அதன் வழியாக இந்துத்துவ வெறியூட்டி வாக்காளர்களை இந்துத்துவாவுக்கு ஆதரவாளர்களாக்கிட தங்கள் அச்சு மற்றும் காட்சி ஊடகங்களைப் பயன்படுத்த பல நிறுவனங்கள் தயாராக இருக்கின்றன. அதற்கு கையூட்டாக பா.ஜ.க. விளம்பரங்கள் வழியாக அள்ளித் தரும் பல கோடி ரூபாயைப் பெற்றுக் கொள்ளக் காத்திருக்கிறார்கள். இந்த உண்மையை அந்த ஊடக முதலாளிகள் மற்றும் தலைமை அதிகாரிகளுடன் நேரடியாக நடத்திய உரையாடல்கள் வழியாக ‘கோப்ரா போஸ்ட்’ அம்பலப்படுத்தி இருக்கிறது. இந்த உரையாடல் பதிவுகளைக் கடந்த வெள்ளிக் கிழமை (மே 25, 2018) ‘கோப்ரா போஸ்ட்’ வெளியிட்டிருக்கிறது.

‘குடி மக்களிடையே வகுப்புவாத மோதல்களை உருவாக்கும் செய்திகளை வெளியிட்டு, அதன் பயன் பா.ஜ.க.வுக்கு கிடைக்கும் வகையில் செயல்படத் தயார்’ என்று இந்த ஊடக உயர்மட்ட அதிகாரிகள் கூறியது வீடியோ காட்சிகள் வழியாக அம்பலமாகி யிருக்கிறது. ‘கோப்ரா போஸ்ட்’ பத்திரிகையாளரான புஷ்பா சர்மா, ‘ஆச்சார்யா அதால்’ என்ற பெயரில் நாக்பூர் ஆர்.எஸ்.எஸ். தலைமையகத்துடன் நெருக்கமானவர் என்று கூறி இந்த ஊடக தலைமை அதிகாரிகளிடம் உரையாடி அந்த உரையாடலை இரகசியமாகப் பதிவு செய்துள்ளார். பணத்துக்காக விலைபோக 27 ஊடக நிறுவனங்கள் தயாராக இருப்பதை முதல்கட்டமாக ‘கோப்ரா போஸ்ட்’ அம்பலப்படுத்தியிருக்கிறது. பணத்துக்காக விலை போக மாட்டோம் என்று உறுதியாக இரண்டு நிறுவனங்கள் மட்டுமே மறுத்துள்ளன. வங்காளி செய்தி ஏடான பர்த்தமான் (Bartaman) மற்றும் டெய்னிக் சம்பாத் (Dainik Sambad) என்ற இரண்டு செய்தி ஏடுகள் மட்டுமே துணிவோடு இதற்கு உடன்பட மறுத்துள்ளன. ‘டைம்ஸ் ஆப் இந்தியா, இந்தியா டுடே, இந்துஸ்தான் டைம்ஸ், டைனிக் பாஸ்கர், சீ நியூஸ், ஸ்டார் இந்தியா, ஏபிபி, டைய்னிக் ஜெக்கான், ரேடியோ ஒன், அவர்னா நியூஸ், ரெட்எஃஎம், லோக்மத், ஏபிஎன், ஆந்திரா ஜோதி, டிவி5, தினமலர், பிக் எஃப்எம், பிரபாத் காஃபர், கே மற்றும் ஓப்பன் ஊடக நிறுவனங்கள் பணம் வாங்கிக் கொண்டு ‘இந்துத்துவா’ செயல் திட்டத்தைப் பரப்புவதற்கும், ஒரு சார்பாக செய்திகளை உருவாக்கியும், பிரச்சாரம் செய்யவும் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளன.

பெறக்கூடிய பல நூறு கோடி ரூபாய் இலஞ்சம் - நிதியமைச்சகம், வருமான வரித் துறைக்கு தெரியாதிருக்க வேண்டும் என்பது குறித்து பல ஊடக அதிகாரிகள் எச்சரிக்கையோடு பேசியுள்ளனர். கருப்புப் பணத்தை எந்த வழிகளில் கையாளலாம் என்பது குறித்தும், ஊடக அதிகாரிகள் விரிவாக விவாதிப்பது வீடியோ காட்சிகளில் இடம் பெற்றுள்ளது. டைம்ஸ் பத்திரிகைக் குழுமத்தின் உரிமையாளர் வினீத் ஜெயின் நிர்வாகத்தின் தலைமை அதிகாரி சஞ்சீவ் ஷா ஆகியோர், இதற்காக ரூ.500 கோடி பேரம் பேசும் காட்சிகள், வீடியோவில் பதிவாகியுள்ளன. “சில கார்ப்பரேட் நிறுவனங்களின் பெயர்களைக் கூறுகிறேன். அவர்களிடம் நீங்கள் ரொக்கமாகத் தந்துவிட்டால், அவர்கள் எங்களுக்குப் பணத்தை வெள்ளையாக்கித் தந்து விடுவார்கள்” என்று வினீத் ஜெயின் கூறுகிறார். “2017ஆம் ஆண்டில் எங்களுக்குக் கிடைத்த வருவாய் ரூ.9,976 கோடி. இதில் 5 சதவீதத்தை அதாவது ரூ.500 கோடியைத்தான் நான் கேட்கிறேன்” என்று அவர் பேரம் பேசுகிறார்.

## ‘சன்’ குழுமமும் துரோகத்துக்கு உடந்தை

‘இந்தியா டுடே’ குழுமத்தின் துணைத் தலைவர் கல்லி பியுர்ரி (Kalli Purie) என்ற பெண்ணுடன் நடத்திய உரையாடலும், ‘டி.வி.டுடே’ தலைமை வருவாய் அதிகாரி ராகுல் குமார் ஷா என்பவருடன் நடத்திய உரையாடலும் வெளி வந்திருக்கிறது. “நாங்கள் பா.ஜ.க. ஆட்சியின் தீவிர தீவிர தீவிர ஆதரவாளர்கள்” என்று கூறிய பியுர்ரி, உரையாடலைத் தொடர்ந்து, ரூ.275 கோடி பணம் கேட்டு ‘கோப்ரா போஸ்ட்’ செய்தியாளருக்கு ‘மின்னஞ்சல்’ அனுப்பியுள்ளார்.

‘இந்துத்துவாவுக்கு’ ஆதரவாக தலையங்கங்கள் எழுதுகிறோம்; செய்திகளில் வெளிப்படையாக இந்துத்துவா ஆதரவை வெளிப்படுத்த முடியாது” என்று ‘இந்துஸ்தான் டைம்ஸ்’ குழும துணைத் தலைவர் அவினீஷ் பன்சால் (Avnesh Bansal) கூறுகிறார். முதல் மூன்று மாதங்கள் மத உணர்வுகளை வாக்காளர்களிடம் உருவாக்குவது; பிறகு இந்த உணர்வுகளை அரசியலாக்குவது; பிறகு வாக்குகளாக மாற்றுவது என்று மூன்று கட்டங்களில் கருத்து உருவாக்கம் செய்வது என்ற வகையில் விவாதங்கள் நடக்கின்றன. வகுப்புவாதத்தைக் கூர்மைப்படுத்துவதற்கு வினய் கட்டியார், உமாபாரதி, மோகன் பகவத் பேச்சுகளை பரப்புவது என்றும் அதற்கேற்ற பிரச்சாரத் திட்டங்கள் வகுக்கப்படும் என்று உரையாடும் காட்சிகளும் இடம் பெற்றுள்ளன. கடைசி கட்டமாக ராகுல் காந்தி, மாயாவதி, அகிலேஷ் யாதவ் போன்ற தலைவர்களை கேலிக்குரியவர்களாக சித்தரிப்பது என்றும் அவர்களுக்கு முறையே பாப்பு, புயா, பாபியா என்று கேலிப் பெயர்களைச் சூட்டுவது என்றும் விவாதிக்கிறார்கள்.

அனைத்து ஊடகங்களிலும் ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர்கள் ஊடுருவி இருப்பதையும் இந்த புலனாய்வு அம்பலப்படுத்தியிருக்கிறது.

மகாராஷ்டிராவில், ‘எம்விடிவி’ என்ற உள்ளூர் தொலைக்காட்சியை நடத்தி வரும் பா.ஜ.க. பெண் சட்டமன்ற உறுப்பினர் மந்தாதேய் என்பவர் கூறும்போது “மசூதிகளையும் மஸ்ஜீத்களையும் இடித்துத் தள்ளுமாறு ஆர்.எஸ்.எஸ். என்னை வற்புறுத்தி வருகிறது. என்னால் அது முடியாது என்று கூறி விட்டேன்” என்று கூறுகிறார். “எனக்கு பா.ஜ.க. போட்டியிட ‘டிக்கட்’ தர மறுத்தது. ஆர்.எஸ்.எஸ். தலையீட்டில்தான் டிக்கட் கிடைத்தது” என்றும் அவர் கூறுகிறார்.

தமிழ்நாட்டில் ‘சன்’ தொலைக்காட்சிக் குழுமத்தின் சார்பில் அதன் விற்பனை அதிகாரி அலெக்ஸ் ஜார்ஜ், மார்க்கெட்டிங் மேலாளர் பி. கண்ணன் ஆகியோரையும் ‘கோப்ரா போஸ்ட்’ சார்பாக செயல்பட்ட புஷ்பா சர்மா சந்தித்துப் பேசியுள்ளார். அவர்களும் இந்த இரகசிய பேரத்துக்கு சம்மதம் தெரிவித்ததாக கூறுகிறார். ‘எங்களுக்கு வியாபாரம்தான் முக்கியம்’ என்று சன் குழும அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள். ஜார்ஜ் என்பவர் கூறுகையில், “பகவத் கீதை வழியாக இந்துத்துவாவை மக்கள் உணர வேண்டும் என்பது சரியான கருத்து. இந்த பிரச்சாரத்தின் வழியாக, எங்கள் கட்சியையும் ‘இந்துத்துவா’வுக்கு ஆதரவான கட்சி என்ற அடையாளத்தை உருவாக்கவே நாங்கள் விரும்புகிறோம். கடந்த 25 ஆண்டுகளாக, இராமன், அயோத்தி பிரச்னைகளின் ஒவ்வொரு நகர்வையும் நாங்கள் அரசியல்படுததி வருகிறோம்” என்றும் ஜார்ஜ் கூறுகிறார்.

மேலும் சன் குழும அதிகாரி பேசும்போது, “எங்கள் முதலீட்டாளர்களுக்கு நல்ல இலாபத்தை ஈட்டித் தரவேண்டும் என்பதே எங்களது முதன்மையான நோக்கம். வணிகம் தான் எங்களுக்கு முக்கியம். உங்களின் திட்டத்துக்கான தொகையை நாங்கள் நேரடியாகப் பெற முடியாது. மூன்றாம் தரப்பு வழியாக எங்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். இந்துத்துவாவைப் பரப்பும் வழி முறைகள் குறித்து நாங்கள் ஒரு திட்டம் உருவாக்கி அனுப்புகிறோம். எங்களுடைய நகைச்சுவை அலைவரிசை, பாடல்கள் அலைவரிசைளில் இடையிடையே வரும் ‘பிரேக்’குகளில் பகவத் கீதை பற்றிய அறிவிப்புகளை வெளியிட முடியும். இதற்காக 20 கோடி செலவாகும். 50 சதவீத பிரச்சாரத்தை தமிழ் அலைவரிசைகளிலேயே செய்யலாம்” என்று பேசுகிறார், சன் குழும அதிகாரி ஜியார்ஜ்.

தமிழ்நாட்டு மக்களை அதிர வைக்கிறது இந்த செய்திகள். ●

**தலையங்கம்**

## மே 22 – படுகொலைகள்

தமிழக வரலாற்றில் இரத்தக் கறைப் படிந்த நாள் மே 22. அன்னிய இராணுவம் ஒரு நாட்டில் படையெடுத்து – அந்த நாட்டு மக்களை ஈவிரக்கமின்றி கொன்றுக் குவிப்பதைப் போன்ற நிகழ்வு, தூத்துக்குடியில் நடந்து முடிந்திருக்கிறது.

இதுவரை நடந்த துப்பாக்கிச் சூடுகள் காவல்துறை வன்முறைகளிலிருந்து மிகவும் வேறுபட்டது தூத்துக்குடி காலித்தனம். ‘ஸ்டெர்லைட்’ ஆலையை மூட வேண்டும் என்ற ஒரே குரல் தான் அங்கே அழுத்தமாக ஒலித்தது. “இந்த ஆலை இருக்கட்டும்” என்று அப்பகுதி யிலிருந்து ஒற்றைக்குரல்கூட கேட்கவில்லை. 1992ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட நச்சு ஆலையையே மூடாமல், அதன் இரண்டாவது பிரிவு தொடங்கவும் அனுமதித்த நிலையில் தான் மக்கள் போராட்டத்தைத் தீவிரமாக்கினார்கள். 99 நாட்கள் அமைதியான போராட்டம் நடந்தது. எந்த அரசியல் கட்சிகளின் தலையீட்டையும் மக்கள் அனுமதிக்கவில்லை.

மக்களின் 99 நாள் போராட்டத்தை மத்திய மாநில அரசுகள் அலட்சியப்படுத்தின. நூறாவது நாள் மாவட்ட ஆட்சி அலுவலகத்தை முற்றுகையிடப் போவதாக அறிவித்தவுடன் காவல்துறை தலையிட்டு பிளவை உண்டாக்கிப் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்த முயற்சி தோல்வி அடைந்தது.

வலிமையான மக்கள் போராட்டத்தைக் கடுமையாக ஒடுக்கி, முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்ற உறுதியான முடிவுக்கு அரசுகள் வந்தன. செயலற்றுக் கிடக்கும் தமிழக அரசை மத்திய அரசின் தூதுவராக இருந்து ஆட்டிப் படைத்து வரும் பார்ப்பன தலைமைச் செயலாளர் வழியாக தமிழ்நாட்டில் போராடும் தூத்துக்குடி மக்களையும் ‘இந்துத்துவா’ எதிர்ப்பில் சமரசமின்றி மக்களை அணி திரட்டும் தேர்தலில் பங்கேற்காத இயக்கங்களையும் முழுமையாக ஒழிப்பதற்கான வாய்ப்பாக இதைப் பயன்படுத்திக் கொள்ள நடுவண் பார்ப்பனிய ஆட்சி தயாரானது. துப்பாக்கிச் சூட்டுக்குப் பயன்படுத்த வேண்டிய நெறிமுறைகளை எல்லாம் புறந்தள்ளி, மார்பிலும், நெற்றியிலும் வாயிலும் குறி பார்த்து சுடுவதில் பயிற்றுவிக்கப்பட்டவர்களைக் களத்தில் இறக்கிச் சுட்டார்கள். மக்கள் ஒன்றாக அணி திரண்டு உயிர் வாழ்வுக்கு உத்தரவாதம் கோரி போராடுகிறார்கள். இதில் காவல்துறை எவரைக் காப்பாற்ற துப்பாக்கியைத் தூக்கியது?

அரசு போட்ட 144 தடை உத்தரவு சட்டத்தைக் காப்பாற்றவும் மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டிடத்தின் சுவர்கள் அங்கே போடப்பட்ட நாற்காலிகளைக் காப்பாற்றவும் துப்பாக்கிச் சூடு நடத்தியதா என்று கேட்கிறோம்?

மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கீழே ஆறாவது நிலையில் இருக்கும் துணை வட்டாட்சியர்கள் தான் துப்பாக்கிச் சூட்டுக்கு உத்தரவிட்டார்கள் என்று காவல்துறையின் முதல் தகவல் அறிக்கை கூறுவது நல்ல கேலிக் கூத்து. உத்தரவிட்ட உயர்நிலையில் உள்ளவர்களைக் காப்பாற்ற நடக்கும் சதி இது.

இவ்வளவு படுகொலை, மக்கள் மீதான கொடூரத் தாக்குதலுக்குப் பிறகு, ஆலையை நிரந்தரமாக மூடுவதாக முதலமைச்சர் அறிவித்திருக்கிறார். நல்ல முடிவு. மக்கள் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி தான். ஆனாலும் இப்படி ஒரு முடிவை எடுப்பதற்கு இவ்வளவு இரத்தம் சிந்தப்பட வேண்டுமா என்ற கேள்விக்கு ஆட்சியாளர்கள் பதில் சொல்லித்தான் தீரவேண்டும்.

ஸ்டெர்லைட் நிர்வாகம் இதை எதிர்த்து நீதிமன்றம் போவதற்கான வாய்ப்பு உண்டு; அப்போது தமிழ்நாடு அரசு உறுதியாக நிற்குமா என்ற கேள்விக்கு தமிழக முதல்வர் பதில் சொல்ல மறுத்திருப்பது சந்தேகங்களை உருவாக்கவே செய்கிறது.

எதிர்காலத்தில் நச்சுத் தன்மைகளை உருவாக்கிடும் எந்த ஆலையையும் தமிழகத்தில் திறக்க அனுமதிக்க முடியாது என்ற உறுதியான முடிவை சட்டமன்றத்தின் வழியாக தீர்மானிக்க வேண்டும்.

துப்பாக்கிச் சூடு நடத்திய அதிகாரிகள் மீது கொலை வழக்குப் பதிய வேண்டும்.

எக்காரணத்தை முன்னிட்டும் இந்த அதிகாரிகளை தப்பவிடவே கூடாது!

# ஸ்டெர்லைட் போராட்டம் கடந்து வந்த பாதை...

ஸ்டெர்லைட் ஆலை தொடங்கப்பட்டது மற்றும் அதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகள், நடைபெற்ற போராட்டங்கள்:

- **1992** குஜராத், கோவா, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் ஸ்டெர்லைட் ஆலை விரட்டி அடிக்கப்பட்டது. மராட்டிய மாநிலம் இரத்தினகிரி மாவட்டத்தில் இந்த ஆலையை அமைக்க அரசாங்கத்தால் 500 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. மக்கள் ஆலையை அடித்து நொறுக்கினர்.
- **15.7.1993 –** இரத்தினகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஸ்டெர்லைட் கட்டுமானப் பணிகளை நிறுத்த உத்தரவிட்டார்.
- **1.8.1994 –** தமிழக அரசு தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை தொடங்க அனுமதித்தது. தொடர்ச்சியாக தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியம் தடையில்லா சான்றிதழ் வழங்கியது.
- **16.1.1995 –** மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனம் அமைச்சகம் ஸ்டெர்லைட் ஆலைக்கு ஒப்புதல் வழங்கியது.
- **14.10.1996 –** தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் இந்த தொழிற்சாலை இயங்க அனுமதி வழங்கியது.
- **20.8.1997 –** ஸ்டெர்லைட் தொழிற்சாலை அருகேயுள்ள தமிழ்நாடு மின்சார வாரிய கிளை நிலைய ஊழியர்கள், ஸ்டெர்லைட் ஆலையில் இருந்து வரும் புகையால் உடல்நலன் பாதிக்கப்பட்டு புகார் அளித்தனர்.
- **23.11.1998 –** உயர்நீதிமன்றம் உத்தரவுப்படி ஆலை மூடப்பட்டது.
- **21.9.2004 –** உச்சநீதிமன்ற கண்காணிப்புக் குழு ஆலையில் நடத்திய சோதனைக்குப் பிறகு ஸ்டெர்லைட் ஆலையின் இரண்டாவது கட்ட விரிவாக்கத் திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்க வேண்டாம் என்று பரிந்துரை செய்தது. ஆனால், ஒரே நாளில் மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வன அமைச்சகம் விரிவாக்கத்துக்கு ஒப்புதல் வழங்கியது.
- **16.11.2004 –** தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் தனது அறிக்கையில், ஸ்டெர்லைட் ஆலை லைசென்சு பெறாமலேயே உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறது என்று குறிப்பிட்டிருந்தது.
- **28.9.2010 –** ஏற்கனவே சுத்தமான சுற்றுச்சூழல் தேசிய அறக்கட்டளை, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மற்றும் சிலர் தொடர்ந்த வழக்கில் இந்த ஆலையை மூட உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. மூன்று நாட்களில் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு, உச்சநீதிமன்றம் தடை விதித்தது. அதைத் தொடர்ந்து 3 ஆண்டுகள் 20 முறை விசாரணை நடந்தது. 20 முறையும் வைகோ டெல்லிக்குச் சென்று உச்சநீதிமன்றத்தில் வாதாடினார்.
- **23.3.2013 –** இந்த தொழிற்சாலையை மூடு வதற்கும், மின் இணைப்பை துண்டிப்பபதற்கும் ஜெயலலிதா ஆட்சி உத்தரவிட்டது.
- **2.4.2013 –** உச்சநீதிமன்றம் இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை இரத்து செய்து, ஸ்டெர்லைட் ஆலை இயங்கலாம் என்று உத்தரவிட்டது. எதிர்காலத்தில் சுற்றுச்சூழல் மாசு கருதி தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் இந்த ஆலையை மூடுவதற்கு ஆணை பிறப்பிப்பதற்கு இந்த தீர்ப்பு தடையாக இருக்காது என்று தெளி வாகக் குறிப்பிட்டிருந்தது. பொதுநலனுக்காக இந்த வழக்கு தொடுத்தவரை கோர்ட்டு பாராட்டுகிறது என்றும் கூறியது.
- **9.4.2013 –** வைகோ தென்மண்டல தேசிய பசுமை தீர்ப்பாயத்தில், ஆலையை மூட திரும்பவும் வழக்கு தொடர்ந்தார். இதேபோல் தமிழக அரசும் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்குகளை தேசிய பசுமை தீர்ப்பாய முதன்மை அமர்வு டிஸ்மிஸ் செய்தது. அதை எதிர்த்து தமிழக அரசும், வைகோவும் உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது.
- **31.5.2013 –** தேசிய பசுமை தீர்ப்பாயம் முதன்மை அமர்வு முன்பு, ஸ்டெர்லைட் ஆலை தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரணை செய்து ஆலையை மூடும் உத்தரவை இரத்து செய்து, தொழிற்சாலையை இயங்க உத்தர விட்டது. இந்த உத்தரவை இரத்து செய்ய ஜெயலலிதா உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இந்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது.
- **12.2.2018 –** ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி அதன் அருகிலுள்ள குமரெட்டியாபுரம் கிராம மக்கள் போராட்டத்தைத் தொடங்கினர்.
- **13.2.2018 – 250**க்கும் மேற்பட்ட கிராம மக்களை போலீசார் கைது செய்தனர்.
- **17.3.2018 –** ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகப் பேரணியும், பொதுக் கூட்டமும் நடத்த வழக்கு தொடர்ந்தனர். மதுரை உயர்நீதிமன்ற கிளை அனுமதித்தது.
- **24.3.2018 –** தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்துக்கு வியாபாரிகள் ஆதரவு தெரிவித்தனர்.
- **26.3.2018 –** பராமரிப்புப் பணிகளுக்காக ஸ்டெர்லைட் ஆலை மூடப்படுவதாக நிர்வாகம் அறிவித்தது.
- **21.5.2018 –** மாவட்ட கலெக்டர் 144 தடை உத்தரவு பிறப்பித்தார்.
- **22.5.2018** அன்று குமரெட்டியாபுரம் மக்கள் போராட்டம் தொடங்கி 100 நாட்கள் ஆனது. தூத்துக்குடி நகரமே போர்க்களமானது. போலீசார் துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் மரணமடைந்தனர், ஏராளமானோர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# விதிகளைப் பின்பற்றாத வேதாந்த குழுமம்

*தூத்துக்குடியில் போராட்டம் தொடங்கிய முதல் 4 நாட்கள் கழிந்த உடன் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும், தூத்துக்குடி கோட்ட வளர்ச்சி அதிகாரியும் ஸ்டெர்லைட் ஆலை வளாகத்துக்குள் 7 இடங்களிலும், அதைச் சுற்றி உள்ள 8 கிராமங்களிலும் நிலத்தடி நீரை எடுத்து சோதனை நடத்தினர். இந்த சோதனையில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட பல மடங்கு நிலத்தடி நீர் மாசுபட்டு இருந்தது தெரிய வந்தது.*

*அதாவது அதிக அளவு ஈயத் தாது தண்ணீரில் கலந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மடத்தூர், காயலூரணி, தெற்கு வீர பாண்டியபுரம், குமரெட்டியபுரம், சில்வர்புரம், பண்டாரம் பட்டி, மீளவிட்டான் ஆகிய கிராமங்களில் இவ்வாறு நிலத்தடி நீர் மக்களின் உடல்நலத்தை கெடுக்கும் வகையில் மாசுபட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதை மாவட்ட நிர்வாகம் வெளியிட்டு, கிராம மக்களிடம் இந்த தண்ணீரை பயன்படுத்த வேண்டாம் என்று எச்சரிக்கை செய்து இருக்க வேண்டும். ஆனால், அது தகவல் அறியும் உரிமை சட்டத்தில் வெளியே வரும் வரை இரகசியமாக வைக்கப்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர் நித்யானந்த் ஜெயராமன் தெரிவித்தார்.*

*இதற்கு முன்பும் 1998 நவம்பர் மாதம் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படியும், 23.3.2013, 9.4.2018 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஆலையை மூட உத்தரவிட்டுள்ளது. கடந்த 23-ந் தேதி ஸ்டெர்லைட் ஆலைக்கான மின்சாரம் தடை செய்யப்பட்டுள்ளது.*

*முன்பெல்லாம் ஏதாவது ஒரு அரசு அமைப்பு ஆலையை மூட உத்தரவிட்டால், மற்றொரு அமைப்பு மூலமாகவோ அல்லது மேல்முறையீடு மூலமாகவோ அனுமதி பெற்று ஆலையை நடத்தி வந்துள்ளனர். அது மட்டும் அல்ல அனுமதி இல்லாத நேரங்களில்கூட ஆலையை நடத்திய வரலாறும் உண்டு.*

(4ஆம் பக்கம்)

## சென்னை மாநாட்டில் பேரா. செயராமன் பேச்சு

# காவிரிப் படுகையை நஞ்சாக்கும் ஓ.என்.ஜி.சி.


*ஏப்ரல் 30, 2018 அன்று தோழர் பத்ரி நாராயணனின் 14ஆவது நினைவு நாளையொட்டி சென்னை, ராயப்பேட்டையில் நடந்த நிலம் பாழ்– நீர் மறுப்பு– நீட் திணிப்பு, தன்னாட்சி– தன்னுரிமை மீட்பு மண்டல மாநாட்டில் மீத்தேன் எதிர்ப்புத் திட்ட கூட்டமைப்புத் தலைவர் பேராசிரியர் ஜெயராமன் 'நிலம் பாழ்' என்ற தலைப்பில் ஆற்றிய உரை. (சென்ற இதழ் தொடர்ச்சி)*

2013ஆம் ஆண்டில் ஷேல் மீத்தேன் திட்டத்தை கொண்டு வந்தார்கள். 3.25 கிலோமீட்டருக்கு கீழே மண்ணுக்குள் இருக்கிற வண்டல் மண் பாறை இடுக்குகளிலிருந்து எடுக்கப்படும் எரிவாயுவை ஷேல் எரிவாயு என்பார்கள். இதையும் மேலே கூறிய தொழில்நுட்பத்தைக் கொண்டுதான் எடுப்பார்கள். ஒரு கிணற்றுக்கு 2 கோடி லிட்டர் தண்ணீர், 16 டேங்கர் மணல், 634 ரசாயனங்கள் கலந்து படுவேகமாக இந்த நஞ்சுக் கலவையை அந்த கிணற்றுக்குள் செலுத்தி, ஒரு செயற்கை பூகம்பத்தை ஏற்படுத்துவார்கள். இதனால் அந்தக் கிணற்றுக்குள் ஒவ்வொரு அங்குலத்தின் மீதும் 600 கிலோ அளவிலான எடை இறங்கும்.

இதிலிருந்து வெளிவரும் எரிவாயுவை மட்டும் பிரித்து எடுத்துக்கொண்டு, அந்த அபாயகரமான கழிவு நீரை அப்படியே நிலத்தின்மீது விட்டு விடுகிறார்கள் இந்த நஞ்சு நீர் நிலத்தடி நீரில் கலந்து நீர்த் தொகுப்பை நஞ்சாக்குகிறது. இந்த நீரை ஆழ்துழாய் கிணறுகளில் பிடித்து குடித்தால் பெண்களுக்கு மலட்டுத் தன்மை ஏற்படுகிறது. ஆண்களுக்கு ஆண்மைக் குறைவு ஏற்படுகிறது. இந்த அபாயகரமான கழிவுநீர் நிலத்தின் மீது தேங்கியிருக்கும்போது அதில் கலந்துள்ள பென்சீன் மீது சூரிய ஒளி பட்டால் போதும், அது ஆவியாகி காற்றில் பரவி அதைச் சுவாசித்தால் ரத்தப் புற்று நோய் வரும். பல நாடுகளில் மக்கள் குடியிருப்பு களுக்கு 60 கிலோமீட்டருக்கு அப்பால்தான் எரிவாயு எடுக்கிறார்கள். ஆனால் இங்கு அப்படியல்ல. கதிராமங்கலத்தை சுற்றி 11 கிணறுகள் அமைத் திருக்கிறார்கள். கதிராமங்கலத்தில் மட்டும் 3 கிணறுகள் அமைத்திருக்கிறார்கள். குழந்தை களுக்கும், மக்களுக்கும் இந்த எண்ணெய் கிணறு களால் பாதிப்பு ஏற்படும் என்பது ஓ.என்.ஜி.சிக்கும் நன்றாகத் தெரியும். கதிராமங்கலத்தில் 22 மாற்றுத் திறனாளி குழந்தைகள் பிறந்திருக்கிறார்கள். திருப்பனந்தாள் ஒன்றியத்தில் 224 குழந்தைகள் மாற்றுத் திறனாளிகளாக பிறந்திருக்கிறார்கள். அதனால்தான் கதிராமங்கலம் மக்கள் தொடர்ந்து போராடுகிறார்கள்.

ஷேல் மீத்தேன் எடுக்க ஓ.என்.ஜி.சிக்கு மட்டும்தான் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. 2017 மார்ச் மாதத்திற்குள் 3.25 கிலோமீட்டர் ஆழத்திற்கு எண்ணெய் கிணறு அமைக்கவும் இந்திய ஆயில் லிமிடெட் ஓ.என்.ஜி.சிக்கு அனுமதி கொடுத்துள்ளது. இதுவரையில் அவர்களால் போட இயலாத அளவுக்கு நாம் போராடி தடுத்து நிறுத்தியிருக் கிறோம். ஆனால் இது போதாதென்று நேரடியாக நிலங்களை எண்ணெய் நிறுவனங்களுக்குப் பிரித்து கொடுத்து, அதில் என்ன வேண்டுமானாலும் 15 ஆண்டுகளுக்கு எடுத்துக்கொள் என்ற திட்டத்தையும் இப்போது அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின்படி டெல்டா மாவட்டங்களில் எல்லா வகையான ஹைட்ரோகார்பன்களும் எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்து, எந்த விலைக்கு வேண்டுமானாலும், எந்த நாட்டுக்கு வேண்டு மானாலும் விற்றுக் கொள்ளலாம். இந்த அனுமதியைத்தான் நெடுவாசலிலும், காரைக் காலிலும் ஜெம் லேபரட்டீஸ் நிறுவனத்துக்கு அளித்தார்கள். இப்போது மக்கள் போராடி அதைத் தடுத்திருக்கிறார்கள்.

இப்போது ஒற்றை உரிமம் (sngle license) என்ற திட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறார்கள். பெட்ரோல் எடுக்க, எரிவாயு எடுக்க, நிலக்கரி எடுக்க என எல்லாவற்றுக்கும் ஒரே உரிமம் பெற்றால் போதும். இது மிக அபாயகரமானது. கருத்து கேட்பு என்பதே கிடையாது. 110 கிணறுகள் அமைக்கும் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தார்கள். இது சீர்காழி மாதானத்திலிருந்து, ராமநாதபுரம் பெரியபட்டிணம் வரையில் 110 கிணறுகள் அமைக்கக் கொண்டு வரப்பட்ட திட்டமாகும். இவை அத்தனையும் ஷேல் மீத்தேன் கிணறுகள் அமைக்கத் திட்டமிட்டிருக் கிறார்கள். மீத்தேன், அணு உலை போன்றவை



**பெட்ரோல் எடுக்க, எரிவாயு எடுக்க, நிலக்கரி எடுக்க என எல்லாவற்றுக்கும் ஒரே உரிமம் பெற்றால் போதும்**

'ஏ' பிரிவை (red category) சேர்ந்தவை. இந்தத் தொழில்களுக்கு அப்பகுதி மக்களிடம் கருத்து கேட்காமல் முடிவு எடுக்க இயலாது. ஆனால் மக்களிடம் கருத்து கேட்க வேண்டாம் என டெல்லிக்காரன் சொல்கிறான். 14.05.2017 அன்று ஓ.என்.ஜி.சி. சுற்றுச்சூழல் துறைக்கு அனுப்பிய கடிதத்தில் நீரியல் விரிசல் முறையைப் பயன்படுத்தி ஷேல்தான் எடுக்கப்போகிறோம் என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். சமீபத்தில் மரக்காணத்திலிருந்து வேதாரண்யம் வரையிலும் ஹைட்ரோகார்பன் எடுக்க 24 எண்ணெய் கிணறுகள் அமைக்கும் திட்டம் குறித்து செய்திகள் வெளியானதை நாம் அறிந்திருப்போம். இந்தத் திட்டத்துக்கு மே 3ஆம் தேதி டெண்டர் பிரிக்கப்படுவதாக இருந்தது. ஓ.என்.ஜி.சி., கெயில் மற்றும் ஆறு பன்னாட்டு நிறுவனங்கள் டெண்டர் கேட்டார்கள். ஆனால் இது போதாது இன்னும் நிறைய நிறுவனங்களை ஈர்க்க வேண்டுமெனத் தேதியை தள்ளி வைத்துவிட்டார்கள்.

3 கிலோமீட்டர் ஆழத்தில் ஒரு கிணறு அமைத்தால் அதற்குள் குழாய்கள் சென்று அதன் எல்லாப் பக்கங்களிலும் மூன்று கிலோ மீட்டருக்கு அனுப்பப்படும். ஆக ஒரு கிணற்றின் ஆக்கிரமிப்புக்குள் 36 சதுர கிலோ மீட்டர்கள் வந்துவிடும். இதனால் அந்த நிலத்திற்குள் பல தொலைவுக்கு ரசாயனம் பரவும். இதெல்லாம் போதாதென்று பெட்ரோலிய சுரங்க உரிமம் (Petroleum Exploration Licence (PEL) and Petroleum Mining Lease) என்று எதை வேண்டுமானாலும் எடுத்து இந்த மண்ணை நாசப்படுத்த 35 கிணறுகள் அமைக்க ஐந்து மாவட்டங்களில் அனுமதி அளித்திருக்கிறார்கள். இந்தக் கிணறுகள் ஐந்தாயிரம் சதுர கிலோமீட்டரில் அமையவுள்ளது. வெவ்வேறு பெயரில் இந்த மீத்தேன் திட்டத்தை கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். தமிழக அரசு இதைப்பற்றி எதுவுமே சொல்லாமல் வாய்மூடிக் கிடக்கிறது.

**எரிவாயுவை மட்டும் பிரித்து எடுத்துக்கொண்டு, அந்த அபாயகரமான கழிவு நீரை அப்படியே நிலத்தின்மீது விட்டுவிடுகிறார்கள்**

ஓ.என்.ஜி.சி. செயல்பாடுகளால் நம்மைக் காவிரி டெல்டா பகுதியில் இன்னும் 20 வருடம் விட்டு வைத்தாலே அதிகம் என்றுதான் கருதுகிறேன். காவிரிப் படுகை இல்லாமல் தமிழகம் வாழாது. காவிரியில் தண்ணீர் வந்தவரை தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சாவூரிலிருந்துதான் 60 விழுக்காடு அரிசி வந்து கொண்டிருந்தது. இப்போது காவிரி தண்ணீர் வராமல் 34 விழுக்காடுதான் இங்குக் கிடைக்கிறது. இதுவும் காலியாகிவிட்டால் நம்முடைய உணவுக்கு வெளியில் கையேந்த வேண்டிய நிலைதான் ஏற்படும். கொள்ளிடத்தில் இருந்து பல பகுதிகளுக்கு குடிநீர் தரப்படுகிறது. சென்னைக்கு வீராணத்திலிருந்து குடிநீர் வருகிறது. டெல்டாவின் முக்கிய மாவட்டங்களான நாகை, திருவாரூர், தஞ்சாவூர் பகுதிகள் இந்தத் திட்டங்களால் காணாமல் போகும்.

ஓ.என்.ஜி.சிக்கு இங்கே 712 கிணறுகள் இருக்கிறது. அதில் 183 கிணறுகள் செயல்பட்டுக் கொண் டிருக்கிறது என்று ஓ.என்.ஜி.சி. நிர்வாகமே கூறுகிறது. ஆனால் மாசுக் கட்டுப்பாட்டு வாரியமோ 219 கிணறுகளுக்குத்தான் எங்களிடம் அனுமதி பெற்றார்கள். அதில் இப்போது 71தான் செயல்படுகிறது. அதற்கும் இப்போது உரிமம் இல்லை என்று சொல்கிறது. ஆக எந்த உரிமமும் பெறாமல் இரவும், பகலும் கள்ளத்தனமாக உறிஞ்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இதைத் தடுத்து நிறுத்துமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு எழுத்துப் பூர்வமாக மனு அளித்தும், அவர்கள் மேலிட உத்தரவுகளுக்குப் பயந்து நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றனர். அதிகம் அழுத்தம் கொடுத்தால் எங்களைத்தான் கைது செய்கிறார்கள்.

இது எல்லாம் போதாது என்று கூறி கடலூர், நாகை மாவட்டத்தின் 45 கிராமங்களில் பெட்ரோ கெமிக்கல் மண்டலம், பெட்ரோல் சுத்திகரிப்பு மண்டலம் கொண்டுவரத் திட்டமிட்டிருக்கிறார்கள். கதிராமங்கலத்தில் 2008ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட ஆய்வு இந்தத் தண்ணீர் குடிக்க ஏற்றது என்று கூறியது. 2013ஆம் ஆண்டில் கண்டுபிடிக்க இயலாத அளவு தண்ணீரில் மாசு கலந்திருக்கிறது என்று ஆய்வு கூறியது. 2017ஆம் ஆண்டில் வந்த ஆய்வு இந்தத் தண்ணீர் பயன்படுத்தத் தக்கதல்ல என்று கூறிவிட்டது. இத்தனைக்கும் அங்கு ஒரு ஆலை கூட கிடையாது. 0.5 கிராம் அளவில் கச்சா எண்ணெய் நீரில் கலந்தால் சகித்துக் கொள்ளலாம். ஆனால் கதிராமங்கலத்திலோ 1.7 கிராம் அளவுக்குக் கலந்திருக்கிறது. இங்கிருந்து மக்கள் வெளியேற வேண்டிய கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒரு பெரிய இன அழிப்புத் திட்டத்தை நம்மீது தெரிந்தே நடத்துகிறது இந்திய அரசு. ஈழத்தில் குண்டுகளை வீசி மக்களை அகதிகள் ஆக்கினார்கள். அதற்குப் பதிலாக இங்கு இதுபோல ஆறுகளை முடக்கி மக்களை வெளியேற்றப் பார்க்கிறார்கள். நிலத்தடி நீரைப் பாழாக்கி பயன்படுத்த முடியாத அளவுக்கு மாற்றும் யுக்தியையும் இந்திய அரசு கையாண்டு கொண்டிருக்கிறது. உயிரோடு இருக்கிற ஒரு மனிதனுக்கு அவனது ரத்த நாளங்களை வெட்டுவதும், ஆற்று நீரை முடக்குவதும் சமமானது என்றுதான் கூற வேண்டும்.

கதிராமங்கலத்தை சுற்றியிருக்கிற பகுதிகளில், போராட்டம் நடக்கிற பகுதிகளில் துணை ராணுவத்தினர் 2000 பேரை இறக்கியிருக்கிறார்கள். இதெல்லாம் எங்கேயோ வட கிழக்கு மாநிலங்களில், காஷ்மீரில்தான் நடக்கும் என்று கருத வேண்டாம். காவிரிப் படுகையில், தமிழ்நாட்டில் நடக்கிறது. டெல்லியில் நடத்த வேண்டிய ராணுவக் கண்காட்சியை இங்கே ஏன் நடத்துகிறார்கள்? இந்தப் பகுதியில் 47 நாடுகள் ராணுவத் தளவாடங்களை அமைத்து உற்பத்தி செய்யவிருக்கிறார்கள். இந்தப் பகுதி நாம் நடமாடக் கூட இயலாமல் ராணுவ மயமாக்கப்படவிருக்கிறது. கிழக்கு கடற்கரை சாலை முழுவதையும் இந்திய அரசு எடுத்துக் கொள்கிறது. தமிழக அரசுக்கு இனி அதில் அதிகாரம் கிடையாது.

இந்திய பார்ப்பனியம் மனமகிழும் வகையில் தமிழக அரசும் இவையெல்லாவற்றுக்கும் ஒத்துப்போகிறது. மற்ற பெரிய கட்சிகள் கூட அதிகபட்சமாக மாநில சுயாட்சி உரிமைகள்தான் கேட்குமே தவிர தன்னுரிமை-தன்னாட்சி உரிமை பற்றி பேசாது. மாநில சுயாட்சி உரிமை என்பது நிதி, நிர்வாக உரிமையைத்தான் அளிக்குமே தவிர இன உரிமையைப் பெற்றுத்தராது. அதில்தான் தன்னாட்சி உரிமை அடங்கியிருக்கிறது. மிக முக்கியமான நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பெரியார் அப்போதே தமிழ்நாடு தனியாகப் பிரிய வேண்டுமென்று சொன்னார். அது அப்போதே நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தால் நமக்கு இந்த சிக்கல்களே வந்திருக்காது. ஆனால் இப்போது விட்ட இடத்திலிருந்து தொடங்க வேண்டியத் தேவை ஏற்பட்டுவிட்டது. இந்தத் தேவையை உணர்ந்து அம்பேத்கரிய இயக்கங்கள், பெரியாரிய இயக்கங்கள், மார்க்சிய-லெனினிய இயக்கங்கள், தங்களை விரிவுபடுத்திக்கொண்டு, தங்களுக்குள் நெருங்கி வர வேண்டும். தமிழ்நாட்டின் தன்னுரிமையை மீட்க வேண்டியத் தேவை இருக் கிறது. இந்த ஒற்றை அரசியலைத் தவிர இன்னொரு அரசியல் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

**செய்தி தொகுப்பு : பிரகாசு**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. 9841489896
newsdvk@gmail.com

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு: கழகம் கண்டன ஆர்ப்பாட்டங்கள்

**மதுரை :** தூத்துக்குடி ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்டத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து 22.05.2018 அன்று மாலை 6 மணிக்கு மதுரையில் திராவிடர் விடுதலைக் கழகம், மே 17, புரட்சிகர இளைஞர் முன்னணி, கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட 60க்கும் மேற்பட்டோர் இணைந்து பெரியார் பேருந்து நிலையம் அருகே சாலை மறியலில் ஈடுபட்டனர். சாலை மறியலில் ஈடுபட்ட தோழர்களை காவல்துறை கைது செய்து இரவு 11 மணிக்கு விடுதலை செய்தது.

**பேராவூரணி :** 23.05.2018 அன்று மாலை அண்ணா சாலை பேராவூரணி யில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மக்கள் எதிர்ப்பையும் மீறி ஸ்டெர்லைட் ஆலையை ஏன் உடனடியாக மூட வில்லை? போராடும் மக்கள் ஆட்சியர் அலுவலகம் வந்த போது ஆட்சியர் எங்கு போனார்? ஏன் அமைதியாகப் போராடும் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப் பட்டது? இதற்கு அனுமதி கொடுத்தது யார்? காவலர்களால் திட்டமிட்டு கலவரம் நடத்தப்பட்டது ஏன்? இராணுவ உதவி வேண்டுமானால் தருவதாக இந்திய உள்துறை அமைச்சர் கூற வேண்டிய தேவை என்ன?

இப்படி பல கேள்விகளை அடுக்கிக் கொண்டே சென்றால் எல்லாவற்றிற்கும் பதிலாக இருப்பது ஸ்டெர்லைட் ஆலையை பாதுகாப்பதைத் தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது. இப்படி அரச பயங்கரவாதம் நடத்தப்படுவதால் போராட்டம் ஓயப்போவதில்லை. இந்த ஆலை உடனடியாக மூடப்பட வேண்டும், குறி பார்த்துத் துப்பாக்கியால் சுட்ட சீருடை அணியாத காவலர்கள் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும், துப்பாக்கிச் சூட்டுக்குப் பொறுப்பேற்று முதலமைச்சர் பதவி விலக வேண்டும் போன்ற கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டது. நிகழ்வில் பல்வேறு கட்சிகள், இயக்கங்கள், அமைப்புகளின் பொறுப்பாளர்கள் மற்றும் நூற்றுக் கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**குமரி :** மார்த்தாண்டம் காந்தி மைதானத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 26.05.2018 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு மாவட்டத் தலைவர் வழக்குரைஞர் வே.சதா தலைமையில் முருகன் (விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மாநிலத் துணைத் தலைவர்) முன்னிலை யில் நடைப்பெற்றது.

கூட்டத்தில் பால் பிரபாகரன் (கழகக் கொள்கைப் பரப்புரைச் செயலாளர்) கண்டன உரையாக நடுவண் பாரதிய சனதா கட்சியின் நான்காண்டில் தமிழகம் நீட், மீத்தேன், நியூட்ரினோ, குமரித் துறைமுகம், ஸ்டெர்லைட் போன்றத் திட்டங்களாலும், இடஒதுக்கீட்டை ஒழிப்பதாக ஆர்.எஸ்.எஸ்-சின் கொள்கை களையும் தமிழர்மேல் திணித்து தமிழர்களை பார்ப்பனர்களின் அடிமையாக செயல்படுத்தத் துடிக்கிறது என்று விளக்கிப் பேசிக் கண்டித்தார். நீதிஅரசர் கண்டன முழக்கங்கள் எழுப்பினார். கூட்டத்தில் தோழர்கள் தமிழ் மதி, சூசையப்பா, மஞ்சுகுமார், இரமேஸ் பாபு, போஸ், சுந்தரமணி, இராதா கிருஷ்ணன், ஜான்மதி ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

**சென்னை :** சென்னை அண்ணா சாலையில் 22.05.2018 மாலை 6.30 மணிக்கு இரா.உமாபதி (தென் சென்னை மாவட்ட செயலாளர்) தலைமையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். அண்ணா சாலையில் மறியலில் ஈடுபட்ட தோழர் கள் காவல்துறையால் குண்டுகட்டாக இழுத்து செல்லப்பட்டனர். தோழர்கள் அனைவரும் புதுப்பேட்டை சமூகநலக் கூடத்தில் அடைக்கப்பட்டு இரவு 9 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர்.

**பள்ளிபாளையம் :** மே 23ஆம் தேதி மாலை 5.30 மணிக்கு கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப் பாட்டத்திற்கு நாமக்கல் மாவட்ட பொருளாளர் முத்துப் பாண்டி தலைமை வகித்தார். மாநில அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, மாவட்ட தலைவர் சாமிநாதன், மாவட்ட செயலாளர் சரவணன், மாவட்ட அமைப்பாளர் வைரவேல், தமிழக தேசியக் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஆதவன், தமிழ்ப் புலிகள் அமைப்பின் மாவட்ட செய லாளர் செந்தமிழன், சி.பி.அய்.எம்.எல் அமைப்பின் நகர செயலாளர் மாரியப்பன், புரட்சிகர இளைஞர் முன்னணியின் மாவட்ட செயலாளர் மாணிக்கம், புதிய ஜனநாயக விசைத்தறி தொழிலாளர் சங்கத்தின் மோகன் உள்ளிட்டோர் பங்கேற்று கண்டன உரை யாற்றினர். இந்த கண்டன ஆர்ப்பாட்டத் தில் நாமக்கல் மாவட்ட கழகத் தோழர்கள் மற்றும் தோழமை இயக்கத் தோழர்கள் உள்ளிட்ட அய்ம்பதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## ஜனநாயகம் : அயர்லாந்தும் பார்ப்பன இந்தியாவும்

குழந்தைகள் பிறப்பது ‘கடவுளின் அருள்’ என்று மதங்கள் மக்களிடம் நம்பிக்கைகளைத் திணித்தன. ஆனால் மத நம்பிக்கைகளுக்கு மாறாக அரசுகளே குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களைக் கொண்டு வந்து மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தின.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களை அதிகமாகக் கொண்ட அயர்லாந்து நாட்டில் செல்வாக்கு செலுத்தி வந்த கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் கருக்கலைப்புச் சட்டத்துக்கு எதிராக சட்டம் கொண்டு வராமல் அரசை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். 1861ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சி அயர்லாந்தில் கருக்கலைப்புகள் கூடாது என்ற தடையைத் திணித்தது. 1973ஆம் ஆண்டு அயர்லாந்து உச்சநீதிமன்றம் இந்தத் தடை சட்டவிரோதம் என்று அறிவித்து கருக்கலைப்புக்கு அனுமதித்தது. 1983இல் அயர்லாந்தில் செல்வாக்குள்ள கத்தோலிக்க பழமைவாதிகள், ‘கருக்கலைப்பு உயிர்க்கொலை - உயிரைக் காப்பாற்றுவோம்’ என்ற இயக்கத்தைத் தொடங்கினர். அப்போது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் மதவாதிகளின் கருத்தே வெற்றி பெற்றது. அரசியல் சட்டம் கருக்கலைப்புக்கு எதிராக திருத்தப்பட்டது.

2012ஆம் ஆண்டு இந்திய மரபு வழியைச் சார்ந்த அயர்லாந்தில் குடியேறிய 31 வயதுள்ள சவீதா ஹலப்பன்வார் என்ற கருநாடக மாநிலத்தைச் சார்ந்த பெண் பல் மருத்துவர் வயிற்றில் வளர்ந்த குழந்தையால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படும் சூழலில் கருக்கலைப்பு செய்யக் கோரினார். அயர்லாந்து சட்டம் அனுமதிக்காததால் கருக்கலைப்பு செய்ய முடியாத நிலையில் அவர் மரணமடைந்தார். மீண்டும் கருக்கலைப்புக்கு ஆதரவான இயக்கம் அயர்லாந்தில் சூடு பிடித்தது. பெண்கள் தொடர்ந்து போராடி வந்தனர். அயர்லாந்து ஆட்சி கடந்த வெள்ளிக்கிழமை (மே 25, 2018) நடத்திய வாக்கெடுப்பில் 66 சதவீதம் பேர் கருக்கலைப்புக்கு ஆதரவாக வாக்களித்தனர். அயர்லாந்து கருக்கலைப்பை சட்டமாக்கப் போவதாக அறிவித்துள்ளது. சவீதா என்ற கருநாடக மாநிலத்துப் பெண் அயர்லாந்து நாட்டில் ஒரு முற்போக்கு சட்டம் கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்துள்ளார். இந்தச் சட்டத்துக்கு சவீதா சட்டம் என்று பெயர் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கைகளும் வலுத்து வருகின்றன. அயர்லாந்து பிரதமர் வரத்கார், ‘ஓரினச் சேர்க்கை’ ஆதரவாளர். அயர்லாந்து ஜனநாயகம் மகத்தான சோதனையில் வெற்றி பெற்றுள்ளது. நவீன தேசத்துக்கு நவீன சட்டங்கள் வேண்டும் என்று மக்கள் தீர்ப்பளித்துள்ளனர் என்று கருத்து தெரிவித்துள்ளார்.

அய்ரோப்பிய நாடுகள் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தாலும் முக்கியப் பிரச்னைகளில் மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தும் சீரிய ஜனநாயக மரபுகளைப் பின்பற்றுகிறார்கள். இந்தியாவில் ‘மெஜாரிட்டி’ இடங்கள் வழியாக அதிகாரத்தைக் கைப்பற்றுகிறவர்கள் அதிகாரத்தை மக்களுக்குப் பயன்படுத்தாமல் பன்னாட்டுக் கம்பெனிகள் நலனுக்கும் மதவெறித் திட்டங்களைத் திணிப்பதற்கும் ஊழல் கொள்ளைக்ககும் பயன்படுத்துவதோடு பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டங்களை நசுக்குவதற்கு அதிகாரங்களைப் பயன்படுத்துகிறார்கள்.

ஸ்டெர்லைட் ஆலைக்கு கடும் எதிர்ப்புகள் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகிறது. ஆட்சியாளர்கள் தூத்துக்குடி மக்களிடம் ஒரு வாக்கெடுப்பை நடத்தியிருந்தால் எப்போதோ இத்திட்டம் மூடப்பட்டிருக்குமே! இத்தனை உயிர்களைப் பலியாக்க வேண்டிய அவசியமிருக்காதே; இந்திய ஜனநாயகம் பார்ப்பனிய மயமாகிவிட்டதால் அதிகாரம் மக்களுக்கு எதிராகவே ஏவப்படு கின்றன. அயர்லாந்து நாட்டில் ஜனநாயகம் மக்கள் குரலுக்கு மதிப்பளிக்கிறது. அதனால் மதங்களின் தடைகளையும் மக்களுக்காகத் தூக்கி எறிகிறது.

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது தவிர, ஸ்டெர்லைட் ஆலையின் மாசு கட்டுப்பாட்டு கட்டமைப்புகள் மிகவும் தரக்குறைவாக உள்ளது. இந்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் அறிவுரைப்படி, பெரிய அபாயகரமான தொழிற்சாலைகளை சுற்றி 500 முதல் 1000 மீட்டர் அகலம் வரை பசுமைப்பட்டி (மரங்கள், பூங்காக்கள்) வளர்க்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஸ்டெர்லைட் ஆலைக்கு 25 மீட்டர் மட்டும் போதும் என்று மாசுகட்டுப்பாட்டு வாரியம் சலுகை அளித்துள்ளது.

இந்த 25 மீட்டர் அகல பசுமை பட்டிக்கூட ஆலை தொடங்கப்பட்ட நாளில் இருந்து இதுவரை அமைக்கப்படவில்லை.

அதிக காற்று மாசு உருவாக்கும் தொழிற்சாலைகள் மாசின் தாக்கத்தை குறைப்பதற்கான முக்கிய கட்டமைப்பு புகைபோக்கி குழாய்கள் ஆகும்.

இதன் உயரம் சட்டப்படி 40 ஆயிரம் டன் உற்பத்தி திறன் கொண்ட ஆலைக்கு குறைந்தபட்சம் 70 மீட்டர் உயரம் கொண்ட புகைபோக்கி குழாய் அமைக்கப்பட வேண்டும். ஆனால், 1996 முதல் இயங்கி வரும் ஸ்டெர்லைட் ஆலையின் புகைபோக்கி உயரம் 60 மீட்டர்தான். இப்போது அதன் உற்பத்தி 10 மடங்கு அதிகரித்துள்ள போதிலும் புகைபோக்கியின் உயரம் அதிகரிக்கப்படவில்லை. இது குறைந்தபட்சம் 123 மீட்டர் உயரம் இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிதாகக் கட்டப்பட உள்ள இதே திறன் கொண்ட இரண்டாவது உருக்காலைக்கு 165 மீட்டர் உயரம் கொண்ட புகைபோக்கி அமைக்கப் போவதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது குறைந்த உயரம் கொண்ட புகைபோக்கியின் காரணமாக காற்று மாசு சரியாகக் காற்றில் கலக்காமல், மக்கள் அதிகம் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளில் அதிக அளவில் கலக்கிறது.

ஸ்டெர்லைட் ஆலை தொடங்கிய நாளில் இருந்து அனுமதி இன்றி இயங்கிய நாட்களின் விவரம் வருமாறு:

- 1997 ஏப்ரல் 1-ந் தேதி முதல் 6-ந் தேதி வரை (6 நாட்கள்)
- 1999 ஏப்ரல் 1-ந் தேதி முதல் மே 19-ந் தேதி வரை (49 நாட்கள்)
- 1999 டிசம்பர் 1-ந் தேதி முதல் 2005 ஏப்ரல் 18-ந் தேதி வரை (5 ஆண்டுகள், 4 மாதங்கள், 18 நாட்கள்)
- 2006 ஏப்ரல் 1-ந் தேதி முதல் 6-ந் தேதி வரை (6 நாட்கள்)
- 2006 அக்டோபர் 1-ந் தேதி முதல் நவம்பர் 11-ந்தேதி வரை (42 நாட்கள்)
- 2007 ஏப்ரல் 1-ந் தேதி முதல் மே 6-ந் தேதி வரை (36 நாட்கள்)
- 2007 அக்டோபர் 1-ந் தேதி முதல் 2009 ஜனவரி 1-ந் தேதி வரை (ஒரு ஆண்டு, 3 மாதங்கள்)
- 2009 ஏப்ரல் 1-ந் தேதி முதல் ஆகஸ்டு 13-ந் தேதி வரை (4 மாதங்கள், 13 நாட்கள்)
- 2010 ஜனவரி 1-ந் தேதி முதல் 2011 ஏப்ரல் வரை (ஒரு ஆண்டு, 4 மாதங்கள்)

## கழகத் தோழர் குகன் தாயார் முடிவெய்தினார்

திராவிடர் விடுதலைக் கழகத் தோழரும் முன்னாள் சுங்கத்துறை கண்காணிப்பு அதிகாரியுமான குகானந்தம் (குகன்) தாயார் ஜெயம்மாள் (86) – மே 27 அன்று முடிவெய்தினார். நங்கநல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் ஏராளமாகத் திரண்டு வந்து இறுதி மரியாதைச் செலுத்தினர்.

கழகத் தோழர்களின் இறுதி வணக்க முழக்கங்களோடு இறுதி ஊர்வலம் புறப்பட்டு மீனம்பாக்கம் இடுகாட்டில் எவ்வித மூடச் சடங்குமின்றி அடக்கம் செய்யப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 31st May 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN